**செம்பாக்கம் நகராட்சியில் 24.1.2020ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திரு. எஸ். சண்முகம்,**
**தனி அலுவலர் / ஆணையாளர் (பொ)**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி 6.25 சதுர கி.மீ பரப்பளவுள்ள, சென்னை மிக அருகாமையில் உள்ள ஒரு இரண்டாம் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியில் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 45356 ஆகும். தற்போதைய மக்கள் தொகை 66340 ஆகும். இந்நகராட்சியில் தற்போது செம்பாக்கம் கிராமப்பகுதியில் வனத்துறைக்கு சொந்தமான நன்மங்கலம் காப்பு காட்டு பகுதியில் சுடுகாடு மற்றும் இடுகாடாக பயன்படுத்தி வருகின்றனர். வனத்துறை மூலம் தடை செய்வதால், அவ்வப்பொழுது சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படுகிறது. பொது மக்கள் இந்நகரில் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைத்து தர கோரி வருகின்றனர்.

எனவே, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நகர கிராம அடங்கல் கணக்கு படி செம்பாக்கம் கிராம அரசு புறம்போக்கு ருத்ர பூமி நிலம் என வகைபாடு உள்ள சர்வே எண்.145 மற்றும் 146/2ல் சுடுகாட்டு பயன்பாட்டிற்கு பயன்படுத்தி வருகின்றனர். இவ்விடத்தினை சுற்றி சுற்றுச்சுவர் நகராட்சியால் அமைக்கப்பட்டு அதில் வடக்கு பகுதியில் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் (MCC) கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. மீதமுள்ள இடத்தில் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைத்தால் இந்நகர மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

நகராட்சியின் கட்டுப்பாடு மற்றும் பராமரிப்பில் உள்ள இடத்தில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்க மூலதன மானிய நிதியின் அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் 7.1.2020ம் தேதிய கூட்ட நடவடிக்கைகளில் இந்நகராட்சிக்கு மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் (Capital Grant Fund) நவீன எரிவாயு தகன மேடை (Gasifier Crematorium) அமைத்தல் பணிக்கு கீழ்காணும் விகிதாசார அடிப்படையில் ரூ.135.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(Rs.in Lakhs)

| Sl. No | Name of the ULB | Sector | Proposed Cost | CGF Grant to be allotted in 2019-20 | CGF Grant to be allotted in 2020-21 | ULB Contribution |
|---|---|---|---|---|---|---|
| 1 | Sembakkam Municipality | Construction of Gasifier Crematorium | 135.00 | 35.00 | 90.00 | 10.00 |

எனவே, நவீன எரிவாயு தகன மேடை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.135.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நவீன எரிவாயு தகன மேடை அமைப்பதற்கான நிர்வாக அனுமதி கோரும் கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு சமர்ப்பிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மூலதன மானிய நிதியின் (Capital Grant Fund) கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக மீதமுள்ள தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.592** அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

**தனி அலுவலர்**
**செம்பாக்கம் நகராட்சி**